உ

பொன்னும்மன்னும் எங்குமொங்கிடுக.

நச்சினார்க்கினியன்

திரிசிரபுரத்தினின்று வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பச்சைமால் அனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
எச்சில்,நாற் றிசையும் உண்ணும்: அமிர்தென, எழுநா எச்சில்,
மெச்சினா னெனும் விண்ணோர் மிசைகுவர்: வேத போதன்
'நச்சினார்க் கினியன்' எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்"

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—தமிழ் மறை

தொகுதி 2. } குரோதன-௵ பங்குனி-௴ 1926-௵: மார்ச்சு-௴ { பகுதி 3.

தெய்வமணி மாலை.

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்.
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்.
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும். பொய்ம்மை
பேசா திருக்க வேண்டும்.
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்.மத மானபேய்
பிடியா திருக்க வேண்டும்.
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும். உனை
மறவா திருக்க வேண்டும்.
மதிவேண்டும். நின்கருணை நிதிவேண்டும். நோயற்ற
வாழ்வின்நான் வாழ வேண்டும்.
தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தவமோங்கு கந்த வேளே!
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே!.

சிதம்பரம்: இராமலிங்க சுவாமிகள்

மகா பாரதம்.

(36-ம் பக்கத் தொடர்ச்சி)

பாரதத்தைத் தமிழில் இயற்றியோர்

இதுகாறும் வேதவியாசபகவானும் பிறரும் வடமொழியில் உபகரித்துள்ள பாரதசரித்திரம் பற்றிய சில முக்கிய குறிப்புக்களைத் தமிழறிந்த அனைவருக்கும் நினைப்பூட்டினோம். இனி, இதனைத் தமிழ்மொழியில் உதவியோரது வரலாற்றுக் குறிப்பையும் ஒருவாறு குறிப்பாம்.

இந்த இதிகாசத்தினத்தைத் தெய்வச் செந்தமிழ் மொழியில் தந்தவர் பலர். அவர்களுட் சிலர் பாரதம்பாடிய பெருந்தேவனாரும், வில்லிபுத்தூராரும், அம்பலத்தாடும் ஐயரும், அஷ்டாவதானம் அரங்கநாத கவிராயரும், நல்லாப்பிள்ளையும், இரண்டொரு போலிப் புலவரும் ஆவர்.

1. பாரதம் பாடிய பெருந்தேவனார் வரலாறு முதலியன.

பெருந்தேவனார் கடைச் சங்கப்புலவர். தமிழ்ப்பாரதம் பாடியவருள் இவரே முதன்மையாராவர். இவர் பாடிய பாரதத் தமிழ்ச்செய்யுள் இக்காலத்துக் காணக்கிடைக்கவில்லை. என்னும், தொல்காப்பியம் புறப்பொருள் வெண்பாமாலை, வீரசோழியம் முதலிய தொன்னூலுரைகளில், சில செய்யுட்களே காணக்கிடக்கின்றன. இவரே சங்கத் தொகைநூற்களுக்குக் கடவுள் வாழ்த்துச் செய்யுள் பாடிவைத்தோர். இப் பாரதச்செய்யுள் பாடியது சின்னமன்னூர்த் தாமிர சாஸனங்களிற் கூறிக் கிடக்கின்றதென அறிஞர் கூறுகின்றனர். அதுவும் பாண்டியர் செயல்களில் ஒன்றென்பது அவர்கள் கூற்று.

இனித் தொண்டை மண்டல சதகத்துக் காணப்படும்,

"சீருறும் பாடல்பன் னீராயிரமும் செழுந் தமிழ்க்கு
வீரர்தஞ் சங்கப் பலகையி லேற்றிய வித்தகனூர்
பாரதம் பாடும் பெருந்தேவர் வாழும் பழம்பதிகாண்
மாருதம் பூவின் மணம்வீ சிடுந்தொண்டை மண்டலமே"

என்னும் பாடலால், தொண்டை மண்டலத்து வதிந்த பெருந்தேவர் என்னும் புலவர், பன்னீராயிரம் தமிழ்ச்செய்யுளில் பாரத சரிதத்தைப்

பாடினர் என அறியப்படுகின்றது. இது முற்குறித்தவரைக் குறிப்பதோ அன்றோ தெளியவேண்டும்.

இப்போது "பாரத வெண்பா" என்னும் பெயருடன் கிடைக்கும் குறைநூலில்,

> "வண்மையாற் கல்வியால் மாபலத்தால் ஆள்வினையால்
> உண்மையாற் பாராள் உரிமையால்—திண்மையால்
> தேர்வேந்தர் வானேறத்—தெள்ளாற்றில் வென்றானே(டு)
> யார்வேந்தர் ஏற்பார் எதிர்?"

என்ற செய்யுள் "காவலன் வாழ்த்"தாகக் கூறப்பட்டுள்ளது. இதனை அடுத்து, இப் பெருந்தேவனாரே எழுதியுள்ளதாகக் கொள்ளப்படும் கட்டுரையில், 'பல்லவர் கோமான் பண்டிதாலயனைப் பாவினேம்" என்று கண்டிருக்கிறது. இக்காரணத்தால் இப் பெருந்தேவனார் தெள்ளாற்றிற் போர்வென்ற பல்லவராயன் ஒருவனால் ஆதரிக்கப்பட்ட விஷயம் தெளிவாகிறது. தெள்ளாற்றிற் பகைவென்ற பல்லவன், 'நந்தி போதவர்மன்' எனப்படுபவன். இவனுக்கு 'நந்திவர்மன்' என்றும், 'நந்திபோதராஜன்' என்றும் பெயர்களுண்டு. இவ்வரசன் தொண்டை நாட்டரசனே. இவன் கி. பி. 853ல் பட்டத்துக்கு வந்தவன். ஆதலின் அவனைப்பாடியுள்ள புலவரும் அவன் காலத்தவரே யாதல் வேண்டும். ஆதலின், இவர், இவன் காலத்திற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பிருந்த 'கடைச்சங்கக் காலத்திருந்த பெருந்தேவனார்' எனக் கொள்ளல் பொருந்தாது. மற்றும், கடைச்சங்கப் புலவர்கள் பெரும்பாலும் பாண்டிநாட்டிலிருந்து விளங்கியவர்களே யன்றித் தொண்டை நாட்டிருந்து விளங்கியவரல்லர்.

இவ்விருவரும் வேறு வேறு புலவரே யென்பதுணர வேறு வழிகளுமுண்டு: சங்கக் காலத்திய பெருந்தேவனார் பெரும்பாலும் சிவபரமாகவே சங்கத்தொகை நூல்களுக்குக் காப்புச்செய்யுள் கூறியவர்; தொண்டை நாட்டுப்புலவர் வைணவர் என்பதற்குச் சான்று வேண்டியதே யில்லை.

பின்னையோர் இயற்றிய நூலில் உள்ள உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் சங்கத்தமிழ் நூல்களிற் பெரும்பாலும் காணப்படாத வடமொழிச்சொற்களும், வடமொழித்தொடர்களும், மிகுதியும் கொண்டது. செய்யுட்களும் கூறியது கூறலாதிய குற்றங்கள் வாய்ந்தவை. ஆதலின் அது சங்கப் புலவர் காலத்திய பாரதநூல் ஆகாது. "இக்கூற்று எவ்வாறு பொருந்தும்? வசனம் மட்டுமே இடைச்செருகலாக இருக்கலாம். பாட்டுக்கள் எல்லாம் பழம்பாட்டுக்களே என ஏன் கொள்ளலாகாது?" "என்று சிலர் எண்ணலாம், அல்லது கேட்கலாம். பழையநூல் உரைகளில் எடுத்தாண்டுள்ள சுமார் 50 பாடல்களில் ஒரு பாட்டேனும் எண்ணூறு பாடல்கள் உள்ள இந்த நூலில் காணப்

படாமையே, முன்னொன்றும் பின்னொன்றுமாக, ஒரே பெயர்பெற்ற புலவர்களால் இரு வேறு காலத்து இரண்டு பாரதத் தமிழ்ச்செய்யுள் நூல்கள் தோன்றினமைக்கோர் சான்றும். கிற்க.

உத்தியோக பருவந் தொடங்கி, (மூன்று பருவங்களில்) யுத்த பருவத்திற் பதின்மூன்றும் நாட்போர் வரையுமேயுள்ள விஷயங்கள் கொண்டதாயும் சுமார் எண்ணூறு பாடல்களையுடையதாயுமுள்ள இப்போதைப் பாரத வெண்பா உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாயமைந்தது என்றேம். இதில் உரைநடை கதைத்தொடர்ச்சியறியப் பல விடங்களில் இன்றியமையாததாயுள்ளது. "பாரத வெண்பா" என்னும் பெயருள்ளதாயினும் இடையிடை வேறு யாப்பினியன்ற பாட்டுக்களுமுடையது.

2. வில்லிபுத்தூரார்:

இவர்கட்குப் பின்னர், இப்பெருநூலைத் தமிழில் விருத்த யாப்பால் யாத்துப் புகழோடு விளங்கியவர் "வில்லிபுத்தூராழ்வார்" என்னும் கவிதார்சார்வ பௌமராவர். இவ்வாழ்வாரையும் இவர்செய்த நூலையும் பற்றிக் கடைசியிற் கூறுவாம்.

3. அம்பலத்தாடுமையர்:

இவர் ஆதி பர்வத்தை மட்டும் விரித்துப்பாடியவர். மடுவைப் பதியில் வாழ்ந்த திம்மராயன் என்பவனது வேண்டுகோட்கிணங்கியும், அவனது பொருளுதவி பெற்றும், இவர் இதனைப் பாடியதாக இவ்வளவே தெரிகிறது. இந்நூல், "ஆதிபருவத்தந்தாதி" எனவும் படும்.

4. அஷ்டாவதானம் அரங்கநாத கவிராயர்;

இவர் இற்றைக்கு 180 வருடங்களுக்குமுன்பிருந்தவர், வில்லிபுத்தூரார் பாடாதுவிட்ட எட்டுப் பருவங்களையும் 2500 செய்யுட்களில் இவர்பாடி முடித்தனர் என்பர். இவர் வரலாறு பெரிதும் அறிதற்கியலவில்லை.

5. நல்லாப்பிள்ளை:

வில்லிபுத்தூராழ்வார் அரங்கநாத கவிராயர் ஆகிய இவ்விரு புலவர் பெருமக்களாலும் மகாபாரதம் குறைபற்று சிலவிப்பல்லோரும் பயில வழங்கிற்றாயினும், வடமொழிப்பாரதக்கதைகள் பெரிதும் வழங்கற்பாடுற்றில வென்று கருதி, முழு முற்றும் பாடுவிக்க எண்ணியவராகிய வீரராகவ ரெட்டியார் என்னும் தமிழ்வள்ளல், அக்காலத்துத் தொண்டை மண்டலத்திலே முதலம்பேடு என்னும் ஊரிலே தமிழ்க் கலைவாணராய்த் திகழ்ந்து, 'தேவசேனைப் புராணம்' இயற்றிப் புகழ்வாய்ந்த நல்லாப்பிள்ளை என்பாரை அழைத்துப் பாரதக்கதையை வியாச பாரதத்திற் கிணங்கப் பாடுமாறு வேண்டினர். கவிஞரும் அங்ஙனமே பாடத் தொடங்கிப் பாடி வருங்கால்,

தம்மொடு ஒருசாலை மாணாக்கராய்ப் பயின்ற முல்லையூர் முருகப்ப உபாத்தியாயர்தாமும் அப் பெருங்காவியத்திற் சில பாகங்களை பாடித் தம் நட்புரிமையையும் நிலைத்த புகழையும் தோற்றுவிக்குமாறு வேண்ட, கவிஞர்பெருமானாகிய பிள்ளையவர்களும் உடன்பட்டன ரென்ப ஆயினும் உபாத்தியாயர் வாக்கு இன்னவெனப் பிரித்தறியக் குறிப்பு ஒன்றுமில்லை. இங்ஙனம் இக் கவிஞர் தாம் புதிதாய்ப் பாரதம் பாடி வருங்கால், வில்லிபுத்தூரார் கவிவளத்தைத் தாம் அறிந்தின்புற்றவாதலின், கதைப்போக்கிற் கேற்றதான மூவாயிரங்கவிகளை இடைப்பெய்து, தாம் புதிதாய்ப் பதினாயிரங்கவிகட்கு மேற்பாடிப் பதினாலாயிரம் கவிகளில் முடித்தனர் என்று கூறுப. இவரது பாரதம் 'நல்லாப்பிள்ளை பாரதம்'' என வழங்கும். சொல்நயம் பொருள் நயம் முதலியவற்றில் இதுவும் போற்றற்குரியதே எனினும், பயில வழங்குகின்றதில்லை. இந்நூல் காஞ்சி வரதராஜப்பெருமாள் சந்நிதியில் அரங்கேற்ற மெய்திற்றென்ப. அக்காலைச் சிலர் பாடிய சில கவிகள் அடியில் வருவன. அவற்றுள், இங்குக் கூறியவற்றை யறிக.

"இத்தகைய பாரதமுன் தமிழ்வெண் பாவாய்
எடுத்துரைத்தார் பெருந்தேவர். இதனை வில்லி
புத்தூர்வே தியன்விருத்த மாக்க வுன்னிப்
புகன்றனன் மூவாயிரமேற் சிலசெய் யுட்கள்.
அத்தகைய காப்பியத்தை மறை வியாதன்
ஆரருளான் முற்றுமவர் இசைத்த வண்ணம்
உத்தமாம் வடமொழியைத் தென்சொ லாக
உரைத்தனன்முத் தமிழ்ப்புலவர் உவகை ஓங்க.

வடமொழியும் தென்மொழியும் வல்லோர்நீதி
வகுத்தநூல் தருமநூல் இரண்டுந் தேர்ந்தோன்,
இடாறுதொல் காப்பியமே முதலாவுள்ள
இலக்கணமும் இலக்கியமு மெல்லாம் ஆய்ந்தோன்,
கடனிகா முதலையூ ராளி நல்ல
கவிராசன் நாவளர்வெண் கமல மங்கை
புடவியுள ஞானமெலாந் தழைத்து மேன்மேல்
பொலிய மகா பாரதத்தைப் புகன்றான் மாதோ.

சீர்பெறுநாற் கலைமகள்தன் அருளாற் செவ்வி
செகம்புகழ்பா ரதம்வடசொற் றமிழாற் செப்பக்
கார்பிணையா வருமுல்லை யுடையா னென்னும்
கருதுபெயர் முருகையனுங் கவியுளானை
நாரமர்நல் லையன்தெளிவின் நயஞ்சல் லாபம்
நடத்திஇதிற் சிலதொடைகள் நவில்வதாக்கி
ஏர்பெறச்செய் கவிதைகளு முடனேகூட்டி
இயம்பினன் முழுதுமென விளம்பு வாரே."

இந் நல்லாப்பிள்ளை சுமார் 150 வருடங்களுக்கு முன்பு இருந்தவர். கருணீக குலத்தினர். தமது இருபதாவது வயதில் இவர் இப்பாடகம் பாடினாராம்! இவர் மரபினர் இன்றும் சென்னையிலுளார் எனத்தெரிகிறது.

6. போலிப்புலவர் ஒருவர்:

பெயர்அறியமுடியாத ஒரு போலிப்புலவரும் பாரதநூலின் ஒரு பகுதி எழுதியிருக்கின்றனர். 'மாலிங்க' மென்றும், 'மகாலிங்க புராண' மென்றும், 'மகாபெங்க'மென்றும் பெயர்மாறாட்டமாக வழங்கப்படும் தமிழ் நூல் அது. அதன் எட்டுப்பிரதி அரசாங்கக் கையெழுத்து நூனிலயத்துள்ளது. இந்நூல் பாண்டவரது மகாப்பிரஸ்தாந சரித்திரத்தைமட்டும் சில கிளைக்கதையோடு கூறுவது. ஆதலால் இந்நூலின் பெயர் 'மகாப்பிரஸ்தாநம்' என்றே இருத்தல் வேண்டும். இம்'மகாப்ரஸ்தாநம்' என்பதே 'மகாப்பிரத்த'மாகி முற்கூறியவாறெல்லாம் சிதைந்திருக்கும் என ஸ்ரீமத் வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரவர்கள். ஊகித்துரைத்தது பொருத்தமானதே. இந்நூல் 1455 செய்யுளுடையது. இது ஜனமேஜயன் சரிதை, காங்கேயர் மோக்ஷம், கிருஷ்ணதேவன்மோக்ஷம், சலிவநகை, தருமபுத்திராதியர் தபசுக்கு ஏகல் முதலாக, யமன் சோதனை தர்மபுத்திரர் பூந்தே ரேறுதல், அடியாரைக் காட்டுதல் இறுதியாகப் பல சிறு பகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இது மகா இழிந்த நடையிலமைந்தது. இதன் நடைத்தாழ்வை,

> "சேனூற லரிசி தேங்காய் திரள்பணி யாரப் பெட்டி
> வானுடர் மதிக்குஞ் சேலை வாகுள பதக்கம் முத்து
> மானுன மக்க ளார்க்கு மணவாளங் காத்துக் கேற்ற
> நாணய மோதிரங்கள் நலமுடன் அனுப்பி னூரே"

> "அந்தமாய் வதிட்டர் வந்து அருமனுஞ் சாம்ப வானும்
> தந்தமாம் வீபிடணனும் தாக்குசுக்ரீபன் கூடத்
> தொந்தமாம் பாரத சத்துரு துய்ய லட்சு மணனங்கதன்
> பந்தமாய்க் கொலு சேவிக்கப் பணிமுடி ராமர்க் கிந்தார்"

என்பன போன்ற பல செய்யுட்களைக் கொண்டறிக. பல்வகைப் பிழைகளுமலிந்த இவ் வதிகேவல நூலைப் பாடியவர், வில்லிபுத்தூரார் குமாரராகிய வரந்தருவார் என்று சிலர் கூசாது கூறுவர்!. இவர் அறியாமைக்கு இரங்குகின்றோம். வரந்தருவார் நடை அவர் தந்தையார் நடைக்குத் தாழ்ந்ததன்று. அவரது செய்யுள் நடைச்சிறப்பை அவர் கூறியுள்ள சிறப்புப்பாயிரச் செய்யுட்களைக்கொண்டே அறியலாம்

(இன்னும்வரும்)

பத்திராதிபர்.

பெண்ணா ? புலியா ?

(57-ஆம் பக்கத்தொடர்ச்சி)

முற்கூறியவாறே, அபராதிக்குத் தண்டனையும் நிரபராதிக்கு வெகுமதியும் அளிக்கப்பட்டு வரும்போது, ஒரு விசேஷ சம்பவம் நிகழ்ந்தது:

இந்த அரசனுக்குப் பெண் ஒருத்தி யிருந்தாள். இவள் ஊரிலுள்ள மங்கையர்களனைவரினும் அழகும் வசீகர வடிவும் வய்ந்தவள். ஆயினும் இவளும் தகப்பனைப் போலவே தன்பிறவிக்குரிய மிலேச்ச சுபாவம் உள்ளவளே. "விரையொன்று போட்டால் சுரையொன்று முளைக்குமா? இவள் அழகிலும் குணத்திலும் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் எவரும் இல்லை யென்ற கர்வம் மிகுதியும் உடையவள். பிறர் ஆக்கம் காணச்சகியாதவள். இவளைத் தகப்பன் மிக்க அன்புடனும் செல்வமாகவும் வளர்த்து வந்தான். இக் கட்டழகி அரண்மனையிலுள்ள உத்தியோகஸ்தர்களில் அதிசௌந்தரியவானான ஒருவனைக் காதலித்து வந்தாள். ஆனால் அவன் அரசன் பெண்ணைக் காதலிக்கும்படியான உயரிய அந்தஸ்து வாய்ந்தவன் அல்லன். ஆயினும், காதல், கட்டுக் காவலுக்கு அடங்கி நிற்குமா? இவன் உள்ளபடியே, "எந்தொழில் மிக்கான். இளையான். இசைவல்லான். காந்தையர் கண்கவர் நோக்கத்தான். வாய்ந்த நபனுடை இன்சொல்லான்" ஆதலின், இவனது வனப்பாதியவற்றில் ஈடுபட்டு அந்த ராஜகுமாரத்தியும் அவனைக் காதலித்தாள். இருவருடைய காதலும் வர வர வளரலாயின.

அரசனுக்குத் தெரியாமல் நடந்து வந்த இந்த விஷயத்தை அவன் ஒருநாள் கவனிக்க நேர்ந்தது. பயமும் மாட்சியும் வாய்ந்த பார்த்திபனது அரமனையில் இந்தத் தகாத சம்பவம் நிகழ்ந்ததே என்பதைக் குறித்துக்கூட அரசன் ஏதும் சிந்தித்திலன். 'கேவலம் அற்பத் தொழிலிலமர்ந்த ஒருவன், உயர்நிலையிலிருந்த அரசனுடைய பெண்ணைத் துணிந்து காதலித்தது சரியா? அல்லது தவறா?' என்பதே அவன் தன் ஏற்பாட்டின்படி, இப்பொழுது ஈசுவர சங்கற்பத்திற்கேற்ப, நிதானித்துத் தீர்க்கவேண்டிய விஷயமாயிற்று, ஆகவே, அவன் அவனை உடனே சிறையிலிட்டு, விசாரணைக்கு ஒருதினம் குறிப்பிட்டான். அத் தினத்தில், அரசன் நிருமித்திருந்த அந்த நியாயமண்டபத்தில் அவனைக் கொணர்ந்து நிறுத்துமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது குறித்த தினத்தைப் பிரஜைகளனைவரும் அதிக ஆவலுடன் எதிர்பார்த்து நின்றனர். ஏனெனில் குற்றஞ்சாட்டப்பட்டவன் கேவலம் பிரஜைகளில் ஒருவன்; அந்தஸ்திற் குறைந்தவன்; ஆயி

னும் அதிஉன்னதநிலையிலுள்ள இராஜ குமாரியையே காதலித்தவன் அன்றோ? இவன் ஊழ்வினைப்பயன் எவ்வாறும் என்பதைப்பார்க்க வந்தவர் எண்ணிறந்தோர்.

குற்றம் பெரிதானமையின், அது செய்தவன் அடையவேண்டிய தண்டனையும் மிக்க கடுமையாய் இருத்தல் வேண்டுமன்றோ? அதற்காக வெகு சிரமப்பட்டுத் தேடிப்பிடித்து அதி பயங்கரமான பதினாறடி வேங்கை ஒன்றை அரசனுத்திரவுப் பிரகாரம் ஓர் அறையில் அடைத்து வைத்தார்கள். ஒருவேளை, அவன் செய்தது ஈசுவர சங்கத்திற்கேற்ப நியாயமாயிருப்பின், அதற்குரிய வெகுமதியும் அவன் பெறவேண்டியது அவசியமல்லவா? இதனை எண்ணியே, ஊரெங்குந்தேடிக், குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு நிகரான அழகும், தக்கவயதுமுள்ள ஓர் இளமடந்தையை, மற்றோர் அறையில் அரசனுத்தரவுப்படி அடைத்து வைத்தார்கள். வழக்கப்படியே புலியின் கோர கர்ஜனை நுட்பச் செவிப்புலன் படைத்தாரும் எவ்வளவு முயன்றும் உணரமுடியாவண்ணம், வேண்டிய சூழ்ச்சிகளும் கருவிகளும் அமைக்கப்பட்டிருந்தன. மற்றும், புலியிருந்த அறையும் பெண் இருந்த அறையும் அரசனும் அறிய இடமில்லாதிருந்தது. இவைநிற்க;

குறித்த தினம் வந்தது. அன்று நடக்க இருந்த அதிசய சம்பவத்தைக்காணப் பற்பல இடங்களிலிருந்தும் ஜனங்கள் வந்து அம்மண்டபத்தில் திரள்திரளாகக் கூடியிருந்தார்கள். அரசனும் உத்தியோகஸ்தர்களும் அம்மண்டபத்தில் தத்தமக்கென்று அமைக்கப்பட்டிருந்த பீடங்களில் வீற்றிருந்தார்கள். குறிப்பிட்ட நேரத்தில் குற்றவாளியை அம்மண்டபத்தில் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அவனது உயரமும் வலிமையும் வனப்பும் கம்பீரத்தோற்றமும் கண்டோர் மனத்தையுங் கண்ணையுங் கவர்ந்தன. அவன் அங்கே வந்ததும், வழக்கப்படி அரசனை வணங்கினான். அவன் வணங்கியது அரசற்குரிய மரியாதையின் பொருட்டன்றிக் கேவலம் ஒப்பாசாரம் பற்றிச்செய்த செய்கையாகவே தோன்றியது. அபாயநிலையில் உள்ளவனது செய்கை வேறு எவ்விதம் இருத்தல்கூடும்? அவன் திடீரென்று அரசனருகே வீற்றிருந்த தன் காதலியைக் கண்ணுற்றான். உடனே அவனது முகம் மலர்ச்சியுற்றது. ஏனெனில், தன்காதலி எப்பாடுபட்டேனும் அம் மர்ம அறைகளைப்பற்றிய உண்மையறிந்திருப்பாள் என்ற பூர்ண நம்பிக்கை அவனுக்கு உதித்தது. இவன் எண்ணியது சரியே. அறைகளைப்பற்றி அரசனும் அறிந்திராத அந்தரங்க முழுமையையும் அறிய, அவளுடைய சீரும் செல்வாக்கும் செல்வமும் முயற்சியும், பதவியும், அவட்குதவின. இதில் என்ன அதிசயம்? இந்த விஷயத்தில் அவளுக்கு மிகுதியும் சம்பந்தமுண்டல்லவா? ஆதலால் அவள் தன்னால் எவ்வளவு தெரிந்துகொள்ள வேண்டுமோ அவ்

வளவுக்கு அதிகமாகவும் தெரிந்துகொண்டு விட்டாள். அதாவது எந்த அறையில் புலியிருக்கிறதென்றும், எந்த அறையில் பெண் இருக்கின்றாள் என்றும் அவள் அறிந்து கொண்டதோடு, அறையில் அடைபட்டுள்ள பெண் இன்னாள் என்பதையும் தெரிந்து கொண்டாள். இம் மடந்தை அரமனை உத்தியோகஸ்தன் ஒருவன் வீட்டுப் பெண்ணே. தன்காதலனும் இவளும் ஏகதேசம் சந்திக்கநேரும் பொழுது பரஸ்பரம் புன்முறுவல் கொள்வதையும், எவர் காதிலும் விழாமல் ஏதோ இரண்டொரு நிமிஷம் பேசிச்செல்வதையும் இவள் கவனித்ததுண்டு. ஆனால் இவர்கள் பேச்சும் சிரிப்பும் கிருத்திரம காரியம் பற்றியதேயென்று துணிந்துகூற முடியாது, ஆயினும் இதைக் காணுந்தோறும் இவள் முகங் கூம்பும். இவள் செய்தி இவ்வாறாக; மேல் நிகழ்ந்த சம்பவத்தை இனிக் கவனிப்போம்.

குற்றவாளி எந்த அறையைத் தான் இப்பொழுது திறக்கவேண்டும் என்று அறிய ஆவலுடன் விரும்பியவன் போன்று தன்காதலியை ஒரு பார்வை பார்த்தான். உண்மையை அறிந்துணர்ந்தறிவிக்க அவள் ஏதேனும் உபாயம் தேடியிருப்பாளென்றும், அது முடியும்வரை அவள் உறங்காள் என்பதும் அவனுக்குநன்குதெரியும். அவள், அவனுடைய கருத்தை அவனது நோக்கினின்றே உற்றுணர்ந்து கொண்டாள். மறுநிமிஷமே, ஏதோ சிரமபரிகாரம் செய்து கொள்பவள் போல நடித்து, அவள், அதிசாமர்த்தியமாயும் மின்னலினும் தீவிரமாயும் தன் வலக்கையை வலப்புறமிருந்த அறைப்பக்கம் நீட்டி மடக்கிக்கொண்டாள். இதனை அதிநுட்பமாய்க் கவனித்துக்கொண்டிருந்தவன் ஒருவனே. அவனே அவளது காதலன். பிறர் எவருமே இதனைக் கவனித்தாரில்லை. அவளது குறிப்பை அவன் அறிந்தது தான் தாமதம். சிறிதும் காலந்தாழ்க்காது அவள் குறிப்பித்த அறையைத் திறந்தான். அச்சமயம் எங்கும் நிசப்தமாயிருந்தது. சிறிதும் கண்கொட்டாது மேல்நிகழும் சம்பவத்தைப்பார்க்க ஆவல் கொண்டவராய் யாவரும் திகைத்து நின்றனர். எல்லோருடைய கண்ணும் மனமும் குற்றவாளியையே பற்றியிருந்தன.

அன்பர்களே! இதுவரை விஷயத்தைவிடாமலே கவனித்துக் கேட்டுவந்தீர்கள் 'இதற்குமேல் நடந்த விஷயம் யாதாயிருக்கலாம்?' என்பதை நீங்களே சிந்தித்துத் தக்கவிடை பகருமாறு உங்களை வேண்டுகின்றேன். அதாவது, திறந்த அறையினின்றும் வெளிப்போந்தது பெண்ணா? புலியா?. உங்களது ஊகம் ஒருபுறமிருக்க; நீங்கள் அரசகுமாரிக்கும் அவள் காதலனுக்கும் உள்ள சம்பந்தத்தை நன்காய்ந்து தக்க விடை கூறுவீர்களாக;

து. அண்ணாசாமி ஐயர்.

பராந்தகன்.

மூன்றாம் காட்சி.

இடம்:—மதுரை: ஒரு பாழ் மண்டபம்.
காலம்:—இரவு 10 மணி.
பாத்திரங்கள்:—பரதேசி, கறுப்பன், அமாவாசை, வீரன், கலுவன் முதலியோர்.

பரதேசி:—(தனபாலன் பொருள்களை அதிகச் சாவதானமாய் ஓர் மறைவிடத்தில் வைத்து வந்து ஒரு பாழ் மண்டபத்தில் உட்கார்ந்துகொண்டு பொய்யும் வஞ்சனையும் பொறாமையும் மலிந்த இவ்வுலகம். இதன் கொடுமை சகிக்கத் தரமன்று. தந்தை தாயர்க்குரிய பிதுர்க் கடனையும் அவர்களுக்களித்த வாக்குறுதியையும் முடிக்கவே நான் உயிர் வைத்துக்கொண்டிருக்கிறேன். பல கூறியென்?

*"வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமின் என்றால் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாகி நெடுந்தூரம் தான் நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்"

இவ் வாழ்க்கையைப்பற்றி "யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்" என்பர். உண்மையே. உண்பது நாழிதான். உடுப்பது நான்கு முழமே. எனக்கு அதற்கும் வகையில்லையே! [பாடுகிறான்]

†"அன்ன விசாரம் அதுவே விசாரம் அது ஒழிந்தால்
சொன்ன விசாரம் தொலையா விசாரநற் றோகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசாரம் இப் பாவி நெஞ்சுக்(கு)
என்ன விசாரம்வைத் தாய்இறை வா!கச்சி யேகம்பனே!,"

[கறுப்பன், வீரன், கலுவன் அமாவாசை, முனியன் முதலியோர் வருகிறார்கள்]

கறு:— அந்தாலே ஒக்காந்து பாட்டுப் படிக்கிறான் பாரு. அந்தப் பரதேசி பயதான்.

வீரன்:— போங்கடா சோதாப் பயங்களா. இவனுக்கா இம்புட்டுப் பயம்? கோளியடிக்கக் குறுந்தடியா? வாங்கடா பொறகாலே. நல்லாச் சுத்தி வளச்சுக்கிட்டு மொத்தரதை விட்டேட்டு பேசரீக.

---

*ஔவையார். † பட்டினத்தடிகள்,

[எல்லோரும் புறப்படுகிறார்கள்]
பரதேசி தன் துப்பாக்கியை
மறைத்துக்கொண்டு கத்தியைச்
சுழற்றுகிறான்.]

அடடே! நில்லுங்கடா நில்லுங்கடா. பய கத்தி வச்சிருக்கான்டா இப்பப் போகப்படாதுடா.

அமா:—வீரா! நீ தான்டா வீரன். வீர தீர சூரப்புலி.

கறு:—ஏன் ரொம்ப ரொம்ப வையாளி போட்டியே! ஏன் நிக்கறே? நாங்களும் கத்தியைக் கண்டுட்டில்லெ இந்தப் புலியைக் கூட்டியாந்தது.

கலு:—என்னடா? இப்படி நிண்டுக்கிட் டிருந்தா? இன்னிக்கும் அவங்கிட்டப் போகவேண்டாமா? பின்னுக்குப் பாத்துக்குவமா? அப்படியாவது சொல்லி அளுங்க.

வீர:—நல்லாச் சொன்னே. சூட்டோடே சூடா ஒருகை பாத்தில்லே விடணும். கறுப்பன்மேலே பெரியவுகளுக்கு எம்பிட்டுக் கோபம்! இந்தப்பயலெ இப்பவும் சும்மாவா விட்டேறது?

அமா:—கறுப்பன் அன்னிக்கே தனபாலனை ஒக்கிட்டிருந்தா எம்புட்டுப் பணம் கெடெச்சிருக்கும்! கேப்பானே நாளைக்கு முத்து 'இதுவரைக்கும் குடுத்த பணத்துக்கு என்ன?' வழி இண்டு. என்ன சவாபு சொல்ரது?

வீர:—ஆமடா. இவனை விட்டுடக்கூடாதுடா. அம்புட்டுப்பேரும் போங்கடா. என்னடா நிக்கிறீங்க?

கறு:—'போங்கடா' இண்டா? நீ மாத்திரம் இங்கேயே இருந்துக்கிறியோ? என்ன புலிடா. வாடா நீயும்.

வீர:—சரி, நானும் வாரேனே. ஆனா ஒண்ணு சொல்ரேன். போனவுடனேயே அவம்மேலே கைகிய் வச்சிடாதீங்க.

கறு:—ஆமா. அதுதாஞ்சரி. மொள்ள மொள்ளப் பேச்சுக் குடுத்து வேலையைச் சாச்சிடுவம்.

அமா:—அது நல்ல ரோசனை. அது நல்ல ரோசனை. நான் பேசரேன் முதல்லே.

[எல்லோரும் பரதேசியைச்
சமீபிக்கிறார்கள்.]

சாமி!, எங்கப்பா! கடவுளே! தண்டம் வருது. கும்பிட்ரோம்.

[எல்லோரும் கும்பிடுகிறார்கள்.

பா:—உங்களுக்கு மங்களமுண்டாகுக. நீங்கள் யார்? எங்கே வந்தீர்கள்? உங்களுக் கென்ன வேண்டும்?

அமா:—சாமிக்கு எந்த ஊரு?

பா:—(புன்னகையுடன்) இந்த நாய்க்குட்டிக்கு ஊரேதப்பா? எல்லா ஊரும் ஊருதான்.

கலு:—அது சரிதான் சாமி. மொத மொதல்லே சாமி பிறந்த ஊரு இல்லே கேக்கறேம்.

பா:—என் எதற்காகக் கேட்கிறுய்?

முனி:—இல்லே, கேக்கறேம். சொன்னு என்ன சாமிக்குக் கொறஞ்சா போகும்?

பா:—ஐயோ! பாவம்! இவ்வளவு பிரியமாய்க் கேட்கிறீர்களே! எல்லாரும் பிறந்த இடத்திலிருந்து தான் இந்த நாய்க்குட்டியும் பிறந்தது.

அமா:—அப்படி இண்டா? நல்லாச் சொல்லுங்க.

பா:—கருவூரப்பா, கருவூர்.

வீர:—சாமி எங்கே போவுதோ?

பா:—எப்போது?

முனி:—இனி எப்பனுச்சுந்தான்.

பா:—எங்கே? மேலூருக்குத்தான்.

அமா:—(கண்ணைச் சிமிட்டிக்கொண்டு) சாமிக்குத் தெரியாததில்லேடா. சாமி பாடுது. ஊதுது. கத்தி சுத்துது.— ஏஞ் சாமி இதெல்லாஞ் சாமி எங்கே படிச்சுக்கிட்டுது?

முனி:—அது இருக்கட்டும். சாமிக்குக் கத்தி எதுக்கு?

வீர:—சாமி அப்பலே ஊதிச்சே. அது எதுக்குச் சாமி?

கறு:—சாமி சேத்தி முண்டாக்கூட இல்லே தட்டிச்சு.

அமா:—ஏஞ்சாமி! இம்புட்டும் எதுக்காக?

பா:— எதுக்காகவா? (சுறப்பனைக்காட்டி) இந்த யோக்கியனை நான் அறிவேன். இவன் எனது முந்தை நாள் சிநேகன். (சிரித்துக் கொண்டே) ஏன் தம்பி! நேற்றே உன்கை கால் சுவாதீனத்திற்கு வந்துவிட்டாற் போலிருக்கிறதே! (மற்றவர்களை நோக்கி) இவனுடைய கூட்டாளிகள் நீங்கள். ஆகையால் நீங்களும் பரம யோக்கியர்கள்: ஒரு முழம் ஒரு ஜாணுவது விலகி நிற்கவேண்டியவர்கள். அதற்காகத்தான் இவ்வளவெல்லாம்.

வீர:—சாமி! முளுமூச்சா அப்படி உத்தரவர்கப்படாதே. நாங்க திருட்டுப் பசகதான் — கறுப்பன் ஒங்களை ஏதுஞ் செஞ்சானு? நீங்களில்லே எங்களுக்கு வர்ர லாவத்தைக் கெடுத்து அவனையும் அடிச்சு விளுத்தினீங்க. இப்பவும் நாங்க எங்களுச்சும் திருடத் தான் வந்திருக்கோம். எங்களெ அடிச்சுக்கிடுச்சு போட்டுடாதேங்க சாமி-

பர:—என்னிடத்தில் வம்புக்கா வந்திருக்கிறீர்கள்? திருடவந்திருந்தால் உங்கள் காரியத்தைப் பாருங்கள். என்னிடமிருப்பது வேண்டுமா உங்களுக்கு? தரட்டுமா? யோசனை வேண்டாம்.

வீர:—ஆத்தாடி! நல்லாச் சொன்னீங்க. களவாங்கற இடமும் கன்னக்கோல் சாத்தற இடமும் தெரியாதா எங்களுக்கு? சாமி வளிக்குப் போகலாமா? சாமி சமிச்சில்லெ போட்டுடும். இருக்கட்டுஞ் சாமி, எங்களெக் கூப்பிட்டீங்களே, என்னத்துக்கு?

பர:—சொல்லி என்ன பிரயோஜனம்? சொன்னால் கிடைக்கப் போகிறதா?

அமா:—சாமி என்ன அப்படிச்சொல்லுது? புலிப்பால் வேணுமா? எம்புட்டுவேணும்? சொல்லுங்க.

பர:—அதெல்லாம் எனக்கெதற்கு? இப்போதைக்கு எனக்கு வேண்டியதெல்லாம் இவ்வளவு சோறுதான்.

வீர:—சோத்துக்குத்தானு பஞ்சம்? வாங்க நம்ம வீட்டுக்கு. சாப்பாடு வேணுமிங்கற வரைக்குங் கிடைக்கும்.

கலு:—எங்கே சாமி! உங்க கத்தியைப் பாக்கலாம்.

[பரதேசி கத்தியைக் கொடுத்துவிட்டு, துப்பாக்கியைக் கையில் எடுத்துக்கொள்கிறான். யாவரும் ஏமாறித் திடுக்கின்றனர்.]

கறு:—சாமிக்கு இந்த ஆயுதங்களெல்லாம் ஏதுக்கு?

பர:—எதற்கா? இப்படி வரிசையாய் உட்காருங்கள் சொல்கிறேன். (யாவரும் உட்கார்ந்தவுடன்) சோற்றுக்கு வழியில்லாவிடின் குத்திக்கொண்டு சாகவோ, அல்லது யாரையேனும் பயமுறுத்திப் பணங்காசு பறிக்கவோதான். — உங்களைப்போல யோக்கியர்கள் வந்தாலும் ஒருகை பார்க்கத்தான்.

வீர:—நல்லாச் சொன்னீங்க. சாமிக்கு சோத்துக்கு என்ன கொறவு? எல்லாரும் போடுவாகளே. எதுக்காக சாமிக்கு எதிரி? பணங்

காசு இருந்தாலில்லே? சாமிக்குப் பாம்பு புலிகூட எதிரியாக இருக்காதே. சாமி பொய் சொல்லலாமா?

பர:—நான்சொல்வது பொய்யே இல்லை. நான் உண்மையில் சாமியாரே இல்லை: நீங்களும் நானும் ஒத்தகுடியே. வயிறுவளர்க்கவும் வஞ்சகம் புரியவும் இந்த வேஷத்தைக்காட்டிலும் உதவுவது எனக்குவேறெதுவும் இல்லை. எத்தனையோ வேஷம் போட்டுப் பார்த்தேன். எனக்கொன்றும் உதவவில்லை கடைசியில்,

*“சாமியார் வேடம் தரித்தவெளி யேறில்இச்சப்
பூமியாரிற் சிலரும் போற்றுவர்கள்— ஆம்இதால்

அங்கமெனக் கோரியதற் கானசடைக் கேற்றமயிர்
எங்கே கிடைக்குமெனத் தருவி— அங்கங்கே

அம்பட்டன் குப்பைகளை ஆழ்ந்துருவக் கிண்டி அசில்
செம்பட்டை நீள்மயிராய்ச் சேகரித்துக்—கொம்படிப்பால்

பம்மாமல் ஒட்டியிரு பாகம் சடைநீட்டிக்
சும்மாடு சுற்றிச் சுமையாக்கிச்—செம்மி அடர்

மென்மீசை தாடியினால் வெள்வாய் தனைமறைத்துக்
கொன்மருவு செப்புக் குழைபூண்டே—என்மதிபோல்

காவிக் கலையுடுத்திக் கால்தலைதோன் று(து) உடலம்
மேவுத்த ரீயம் மிகவணிந்து—கூவுகண்ட

நன் மணிருத் ராக்ஷமிட்டு நாலுமணித் தாழ்வடமும்
கன்மஷஞ்சேர் உள்ளக் சரவடமும்—என்கரத்தில்

மாத்திரைக்கோ லேந்திஇற மாப்புடன்அண் ணாந்துநடந்(து)
எத்துறுப்வெண் ணீற்றினை ஏராளமாய்க்—காத்திரமீ(து).

எல்லையறப் பூசிநயக் தென்னத்தை யோபோட்டு
மெல்லுவன்போல் வாயை மினுமினுத்து—நல்லகுமிழ்ச்

கட்டைமே லேறிஒரு காவிக் குடைபிடித்து
வட்டவிபூ திப்பை மடியிலங்க—முட்டர்இரு

சீடர் தலைகுனிந்து சேவித்து வாய்புதைத்து
மாடியம் ஈ தென்று வழிகாட்டத்—தேடரிய

நாலாறும் மூவாறும் நன்குறவும் ஆய்ந்தவன்போல்
மேலாய் நடித்து வெகுமிடுக்காய்ப்—போலியெனும்

வேஷமதைப் பூண்டு வெளிப்பட்டேன்”

இவ்வேஷத்துடன் எவர்வீட்டினுள்ளும் தாராளமாய்ப் போய்த் திருடுவதும், உளவறிவதும், அதனால் வயிறு வளர்ப்பதும் என்

* வில்லியப்பபிள்ளை

வழக்கம். சமயம்நேர்ந்தால் கொலை செய்யவும், என்னையே காத்துக்கொள்ளவும் வேண்டி வருமென்றே இவ்வாயுதங்களை வைத்திருக்கிறேன். பாருங்கள், என் தலையிலெழுத்து, ஒரு சமயம் என் யோக்யதை பூராவும ஊரில் தெரிந்துவிட்டதால் நான் அதைவிட்டு வெளிக்கிளம்பவேண்டியதாயிற்று. இங்கு வந்தது முதல், நான்செய்த பாவம் போதும், எனக்குச் சோறு கிடைப்பதும் அரிதாயிற்று. எந்தப்புண்ணியவானுவது எனக்கு வயிறாச் சோறுபோடுவானுனல், அவனுக்கு மாடு மாதிரியாக உழைப்பேன்.—மிகுந்த பசி.

விர:—இந்தப்பொய், சாமி யார்கிட்டக் கத்துக்கிட்டது? சாமி எம் பட்டுப் படிச்சுருக்கு! நீங்களும் நாங்களும் சரியிண்டா ஒப்புவாளா? அம்ப ரெண்டுபேரும் பேசற பேச்சே சாமி ஒசந்தகுல மிண்டு காம்பிக்குதே.

பர:—சரி நம்பமாட்டீங்களாக்கும்? அம்ப பேச்சுப் பேசினுத்தான் ஒங்களுக்கு நம்பிக்கைவரும்.

[தாடி, மீசை, மேலுடை, முதலியவற்றைக் களைந்தெறிந்து, பயங்கர ரூபத்துடன் விளங்குகின்றான். இவனைக்கண்டதும் யாவரும் திடுக்கிடுகின்றனர்.]

அண்ணமாரே! இப்பென்ன சொல்றீகே? ஏளெ சொல்லு அம்பலம் ஏறுமா?

கறு:—(வீரனைநோக்கி) என்னண்ணே! நாமகூட ஏமாந்துட்டம்? ஒருநாளிக்குமுன்னே எப்படி யிருந்தவன் எப்படி ஆயிட்டான் பாத்தியா?

விர:—(ரகஸ்யமாய்) சரி. இப்படியாக்கொந்த ஆளுத்தான் நமக்கு இப்பவேண்டியது. (பரதேசியைப்பார்த்து) ஏங் தம்பி, ஒம் பேரென்ன?

பர:—அந்த எளவெல்லாம் ஆருகண்டா. எங்க அப்பு, நான் இம்பிட்டுப்பிள்ளையாயிருக்கச்சே செத்துப்போச்சு. என்னை எங்க மாமன் 'இருளன்' 'இருளன்' இண்டு கூப்பிடுவாக. ஒரு புண்ணியவான் படிக்கவச்சான். இருந்தாலும் அம்ப சாதித்தொழில் போகுமா? மீங் குஞ்சுக்கு நீச்சுப்பளக்கியா கொடுக்கனும்? படிச்சுங்கூட புத்தி அதிலெல்லாம் போகல்லே பாரு.

வீர:—அப்படியா? இந்தா இருளா! இனிமே ஒனக்கு ரோசனையே வேண்டாம். ஒனக்கு வேலைக்கிக் கொறவில்லை வா. பெரியவுக கிட்டப்போவோம். எங்களுக்குமட்டும் நீ சரியா நடக்கணும் அம்புட்டுத்தான்.

இருளன்:—சோத்துக்கில்லாமே சாகத்துணிஞ்சவன் கிட்டயா இம்புட்டுச் சந்தேகம்? ஒங்க சோறும் வேண்டாம், நான் வரவுயில்லே.

கறு:—சே! கோவிச்சுக்காதே. பெரியவுக பொல்லாதவக. எடுத்ததுக்கெல்லாம அவுகளுக்கு சமுசியம். அதுக்காகத்தான் வீரணன் சொல்லிச்சு. இருக்கட்டும், நடுத்தெருவிலே நம்ம சமுசாரம் பேசறது நல்லால்லே. வீட்டுக்குப்போயி பேசிக்குவோம். நாளியாச்சு. வாங்க போவோம்.

இருளன்:—ஆமா, இப்பவே சொல்லீட்டேன். வர்ரேன். நான் நல்லவகளுக்கு நல்லவன். போக்கிரிக்குப்போக்கிரி. நான் வந்ததுக்குப்பொறகு வம்பு தும்பு எங்கிட்ட பண்ண ஆரம்பிச்சிங்களோ விடமாட்டேன். என்னைப் பகச்சபய செத்தான். (கறுப்பனை நோக்கி) அண்ணே! அப்போ நான் ஒன்னே அடிச்சுப்போட்டேனின்டு கோவமோ? சமுசாரம் ரொம்ப இருக்கு பொறகு சொல்றேன் அம்ப ரெண்டு பேரும் இனிமே சேத்தாளிதான். எப்பிட்டுஉதவி செய்ரேன் பாரு ஒனக்கு

வீரன்:—தப்பி, கள்ளங்களா இருந்தாலும் நாம அம்பளுக்குள்ளெ சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவக. ஒருபயலாவது தொடுவானு ஒன்னே? ஒன்னைப்பகைச்சவன் எங்களெப் பகைச்சவனில்லே? நீ ஒண்ணும் ரோசிக்கவேண்டாம். பெரியவுகளெ எப்படியாவது சரிப்படுத்திப்போட்ரோம்.—வாங்க, போவோம் சீக்கிரம்.

[எல்லோரும் போகிறார்கள்]

[மூன்றாம் காட்சி முற்றிற்று]

திருக்குடந்தை: ஆயக்கண்ணனார்.

———

பெஞ்சமின் பிராங்க்லின்.
Benjamin Franklin.

அத்தியாயம் 3.

நட்புப் பிரிவு

''நாடாது நட்டலிற் கேடில்லை''—திருவள்ளுவர்.

பெஞ்சமின் நியூயார்க் சென்றதும், அங்கிருந்த ஒரு அச்சுக்கூடத்திற்குச் சென்று தனக்கு ஏதேனுமொரு வேலை தரவேண்டுமென்று அதன் தலைவனை வேண்டினான். அவன் அங்கு வேலை ஒன்றும் 'காலி' யில்லை யென்றும், அவ்வூரில் வேறு அச்சுக்கூடம் எதுவுமில்லாததால் அவன் நாடிவந்த வேலை கிடைக்காதென்றும், பிலடல்பியா (Philadelphia) சென்றால் அங்கு கிடைக்கக் கூடுமென்றும் தெரிவித்தான். பெஞ்சமின் காலந்தாழ்க்காது அங்கிருந்து புறப்பட்டு நூறுமைலுக் கப்பாலிருந்த அவ்வூருக்குப் பிரயாணமானான். வழியில் அவன் அடைந்த கஷ்டங்கள் அநேகம்: கையில் காசில்லாததால் அவன் ஐம்பது மைலுக்குமேல் நடந்தே செல்லவேண்டி வந்தது. வெயிலிலுலர்ந்தும், மழையில் நனைந்தும், அவன் பிலடல்பியா வந்ததும், அங்கிருந்த ஓர் அச்சுக்கூடத்திற்குச் சென்றான். அங்கும் அவனுக்கு வேலைகிடைக்கவில்லை. கடைசியில் கடவுள்கிருபையால் கீமர் (Keimer) என்பவரிடம் வேலைக்கமர்ந்தான். இந்தக் கீமர் அச்சுக்கூடத்தின் தலைவராயினும் அச்சுக்கோக்கும் தொழில் ஒன்றே அவருக்குத் தெரியும். அச்சுக்கூட சம்பந்தமான பிற விஷயம் எதும் அவர் அறியாதவர். ஆகலால், அவை யாவுமறிந்த பெஞ்சமின் அவரிடம் வேலைக்கமர்ந்தது கீமரின் அதிர்ஷ்டமேயாம்.

பெஞ்சமின் வேலைபார்த்துக்கொண்டு வரும்பொழுது, அவனுடைய சகோதரியின் கணவரிடமிருந்து ஒரு கடிதம் அவனுக்கு வந்தது. அவர் ஒரு வியாபாரக் கப்பலின் தலைவர். அக்கடிதத்தில் அவர், பெஞ்சமின் ஊரிலிருந்து ஒருவருமறியாமல் ஓடிவந்தது தவறென்றும், அவனது பிரிவாற்றாது வருந்தும் பெற்றோர்களிடம் உடனே போய்ச் சேரவேண்டியது அவனது கடமை என்றும் எழுதியிருந்தார். பெஞ்சமின் அவரது அன்பை வியந்து, நன்றி கூறித் தான் நிரபராதி என்பதையும் நிகழ்ந்த விஷயங்களை உள்ளவாறும் அறிவித்துப் பதில் கடிதம் எழுதினான்.

இக் கடிதம் போய்ச்சேர்ந்த சமயம், அதன் விலாசதார், அம்மாகாணக் கவர்னரான ஸர் வில்லியம் கீத் (Sr William Keith)

என்பவரோடு பேசிக்கொண்டிருந்த சமயமாய் இருந்தது. அதனால் அக் கவர்னரும் அக்கடிதத்தைப் பார்க்கவும் அதிற்கண்ட விஷயங்களை அறியவும் நேர்ந்தது. பெஞ்சமனின் உரைநடைத் திறன் விநய மொழி முதலியவற்றைக் கண்ட கவர்னர், அவன் வயதிற் சிறியோனாயினும் அறிவிற் பெரியோனாயிருப்பது கண்டு வியந்தார். அவன் முன்னுக்கு வரக்கூடிய சிறுவனென்றும், எவ்வித உதவிக்கும் பாத்திரனென்றும் அபிப்பிராயம் கொண்டார்.

சில நாட்களுக்குப் பின் அவ்விருவரும் பிலடல்பியாவுக்கு வர நேர்ந்தது. அச்சமயம், அவர்கள், தாமே நேரில்போய் பிராங்க்லினைப் பார்த்தார்கள். கவர்னர் அவனைத் தம்முடன் உண்ண அழைத்தார். அப்பொழுது இருவருக்குள்ளும் நிகழ்ந்த சம்பாஷணையால் கவர்னருக்குப் பிராங்க்லின் மீதிருந்த அன்பு அதிகரித்தது. பிலடல்பியாவிலே ஓர் அச்சுக்கூடம் ஸ்தாபிக்கப் பெஞ்சமினுக்குப் பொருளுதவி செய்ய வேண்டுமென்றும், செய்யின், அவன் வெகு சீக்கிரம் முன்னுக்குவருதல் கூடுமென்றும், பரிந்துகூறி அவர் அவனது தந்தைக்கு நீண்டதோர் கடிதமெழுதி அதை அவன் மூலம் போஸ்டனிலிருந்த அவரிடம் அனுப்பினார்.

தந்தை, அக்கடிதத்தைப் பார்த்ததும், கவர்னருக்குத் தம் மகனிடத்திருந்த நல்லபிப்பிராயம் அறிந்து மகிழ்ந்தார். ஆயினும், பதினெட்டே வயதுள்ள தம்மகன், 'முதல்' போட்டு அச்சுக்கூடத் தலைமை வகிக்கத் தகுதியற்றவனென்றும், ஆதலால் அவன் சிரமப்பட்டு இன்னும் மூன்று வருஷம் உழைத்து, உலக அநுபவமறிந்து, செட்டாய் இருந்து, ஏதேனும் பொருள் மீத்துக் காண்பித்தால், பின்பு தம்மால் இயன்ற உதவிசெய்யக் கூடுமென்றும், அறிவித்துவிட்டார். ஆயினும் பிலடல்பியாவிலேயே, அவன் தக்க பொருளீட்டும்வரை அவர் இருக்க அனுமதி அளித்தார்.

தந்தையின் கட்டளைப்படி அவன் பிலடல்பியாவுக்குத் திரும்பு முன், ஓர் சம்பவம் நிகழ்ந்தது: ஒருநாள் முதல் அத்தியாயத்தினுள்ள 'நலஞ்செய்யுமாறு' என்ற வியாசமெழுதிய பெரியாரை அவன் தரிசிக்கச் சென்றான். அவருடன் சம்பாஷித்துத் திரும்புகாலையில், அவர் வெளியே செல்லக்கூடிய ஒரு குறுக்குவழியைக் காட்டி 'இதன்வழியே செல்க; விரைவில் வெளிப்போகலாம்' என்றார். அவ்வழிச் செல்வோர் தலைகுனிந்தே செல்லல் வேண்டும், இல்லையேல், தலையில் உத்திரம் தட்டும். ஆகலின் அப் பெரியார் இச் செய்தி அறியா அவனைத் 'தாழ்ந்து செல்க' 'தாழ்ந்து செல்க' என்று எச்சரித்துக்கொண்டே வந்தார். அவரது கருத்துணராது பெஞ்சமின்பிராங்க்லின் நிமிர்ந்தே செல்ல, உத்திரம் அவன் தலையிலே தட்டியது. இதுகண்ட அப் பெரியவர், "தம்பி! நீ இப்பொழுது பட்ட அவஸ்தை பெரிதாயினும், உலகில்'தாழ்ந்து நிற்பவரே வாழ்ந்து

திற்பார்' என்பதை நீ அறிய நற்சமயம்வாய்த்தமைக்கு மகிழ்கிறேன்" என்றார். இந்தப் படிப்பினை பசுமரத்தறைந்த ஆணிபோல் அவன் மனதிற் பதிந்து நின்றது. இது நிற்க.

பெஞ்சமின் பிலடல்பியாவுக்குத் திரும்பிச் செல்லும்பொழுது ஒரு ஊரில் வேர்னன் (Vernon) என்பவரைச் சந்தித்தான். இந்த வெர்னன், பிராங்க்லினுடைய மூத்த சகோதரனின் ஆப்த நண்பர். இவர் நியூயார்க்குச் சமீபமிருக்கும் ஒருவர் 35 பவுன் தமக்கு தா வேண்டுமென்றும், இதைப் பெஞ்சமின் தமக்காக வாங்கிவைத்திருந்து, தாம் வேண்டும்போது அனுப்பினால் மிகுந்த உபகாரமாயிருக்குமென்றும் கூறி, அத்தொகையை அவனிடம் தந்துவிடுமாறு தம் கடனாளிக்கும் கடிதமொன்று அவன்மூலம் அனுப்பினார். பெஞ்சமினும் அவ்வாறே அத்தொகையை வாங்கி வைத்துக்கொண்டான். இது நிற்க.

பெஞ்சமின் போஸ்டனுக்குப்போயிருந்த காலத்தில் தன்பழைய நண்பனை காலின்ஸைச் சந்தித்துச் சம்பாஷிக்க நேர்ந்தபோது, பிலடல்பியாவைப்பற்றியும் அங்குள்ளோர்களின் தொழின்முயற்சிகளைப்பற்றியும்விரிவாகக்கூறியிருந்தான். அதுகேட்ட காலின்ஸுக்கு, தானும் பிலடல்பியா போய் அங்கொரு தொழிலைக் கைக்கொள்ள வேண்டுமென்ற விருப்பம் உண்டாயிற்று. இவ் அபிப்பிராயத்தை அவன் பெஞ்சமினுக்குக் கூறி, உடனே நியூயார்க்குக்குப் பிரயாணமானதுடன், தன்னை அங்கு வந்து தவறாமல் சந்திக்குமாறு அவனைக் கேட்டுக்கொண்டான். பெஞ்சமினும் அவ்வாறே செய்தான்.

இந்தக் காலின்ஸ் ஆதியில் நல்லோனாய் இருந்தும், பிராங்க்லின் ஊரில் இல்லாதகாலத்தில், சகவாச தோஷத்தால் கெட்டே போனான். குடியர், வெறியர், கயவர், சூதாடிகள், வீணர் முதலானோர் இவன் நண்பராயினர். இதனால் இவனுடைய அறிவும் புகழும் கெட்டன, 'மாந்தர்க்கு இனத்தியல்வதாகும் அறிவு' என்பது பொய்யாமொழியன்றோ?

நியூயார்க்கில் இருக்கும்பொழுதே, காலின்ஸ் தன்கைப்பொருள் யாவையும் சூதாட்டத்திலும் குடியிலும் செலவழித்துவிட்டான். அவன்நிலையைக்கண்டு இரங்கிய பிராங்க்லினே அவனைப் பிலடல்பியாவுக்குத் தன்கைப்பொருளைச் செலவிட்டு அழைத்துச்செல்லவும், சிறிதுகாலம் அவனைச் சம்ரக்ஷணை செய்யவும் வேண்டி வந்தது: காலின்ஸ் முன்பு தன்பிரயாணத்திற்கு உதவி செய்த நண்பனன்றோ?

என்னசெய்துமென்ன? அவனுடைய துர்நடத்தை வெளிப்பட்டதாலோ, பிற காரணங்களாலோ, அவன் எவ்வளவு முயன்றும் ஒரு வேலையும் கிடைக்கவில்லை. இந்நிலையிலும் அவன் குடியை விட்டானில்லை. அவனுக்கு உணவிற்கும் வழியில்லாமற் போயிற்று. பெஞ்ச

மினால் அவனுக்கு எவ்வளவு காலந்தான் உதவி செய்யமுடியும்? அவனும் கைசலித்துப் போயினன். முடிவில், வெர்னன் என்பவருடைய பணம் பெஞ்சமின் கைவசமிருந்ததை அறிந்த காலின்ஸ், அவனுக்கு நம்பிக்கை மொழிகள் பல கூறியும், தான் வேலைக்கமர்ந்ததும் திருப்பிக்கொடுப்பதாக வாக்குறுதிசெய்தும், சிறிது சிறிதாகவும், அடிக்கடியும், அத் தொகையினின்று கடன்வாங்க ஆரம்பித்தான். 'தாக்ஷிண்யம் தனநாசனம்' என்பதன் உண்மையைப் பிராங்க்லின் அறிந்து வருந்தும் காலமும் வந்தது. பொருள் முழுதும் யானை வாயிற்போன கரும்பானதை நன்குணர்ந்து, பெஞ்சமின், வெர்னனுக்கு என்னவழி சொல்வது என்று தெரியாமல் தியங்கினான். பணநஷ்டத்துடன் இருவருக்கும் மனஸ்தாபமும், குடிவெறிகாரணமாகப் பகைமையும் மூண்டன. இக்குடி படுத்தியபாடுதான் என்னே!:

ஒருநாள் மாலைப்பொழுதில் பெஞ்சமினும், காலின்ஸும் தங்கள் நண்பருடன் பொழுதுபோக்குக்காக ஆற்றில் படகோட்டிக்கொண்டிருந்தனர். நட்டாற்றில் படகு வந்தவுடன் குடிவெறி தலைக்கேறிய காலின்ஸ், தான் தண்டுவலிக்க முடியாதென்றும், தன்னை உடனே கரையிற் சேர்ப்பிக்கவேண்டுமென்றும், யாவர்க்கும் கண்டிப்பான கட்டளையிட்டான். அவனது கடுஞ்சொல்லையும் இறுமாப்பையும் பொறாத பிராங்க்லின் "உன் உருட்டுக்கும் மிரட்டுக்கும் அஞ்சோம், நீயும் உனக்குரிய கடமையைச் செய்தேதீரவேண்டும். இல்லையேல் படகு ஒரு அங்குலமும் நகராது. அவசியமாயின், இராமுழுவதும் இங்கேயே இருக்கச் சித்தமாயிருக்கிறோம்" என்றான்.

காலின்ஸிக்குக் கோபத்தால் முகம் பொங்கியது. ஒரே அறையில் அவனை வீழ்த்த எண்ணி அவனை நோக்கி ஓடி வந்தான். இஃதறிந்த பிராங்க்லின் தன்னையும் பிறரையும் காத்துக்கொள்ளவும், அவனுக்குப்புத்தி வருவிக்கவும் கருதி, (அவன் நல்ல நீச்சுக்காரன் என்ற விஷயம் தனக்குத் தெரியுமாதலின்) அவனைக் குண்டுக்கட்டாகக் கட்டி, ஆற்றில் எறிந்து விட்டான். அவன் நீந்திப் படகை நோக்கிவரும்போதெல்லாம் படகை அதிவிரைவில் செலுத்திக் கைசளைக்கச் செய்து, அவன் பரிதாபநிலையில் இருந்தபொழுது அவனைப் படகிலே தூக்கிப் போட்டுக்கொண்டான். இது நிகழ்ந்ததன் பின், இருவருக்கும் பேச்சு வார்த்தை இல்லாமற் போயிற்று. கடைசியில் காலின்ஸ் ஒரு வேலை பெற வேற்றூர் சென்றான். அவன் கடனாகப் பெற்ற வெர்னனது பணம் பிராங்க்லினுக்குத் திருப்பிக் கொடுபடாமலே போயிற்று. "நல்லிணக்க மல்லது அல்லற்படுத்தும்" என்பதன் உண்மையை அறிந்து பிராங்க்லின் தன் நிலைக்கு இரங்கினான்.

(தொடரும்)

P. சுந்தரராஜையங்கார் B. A.
சரித்திராசிரியர், விருதுநகர் க்ஷத்திரிய வித்தியாசாலை.

நச்சினார்க்கினியன் வாழ்த்து.

கங்கையிற் புனிதமாய காவிரி பாயப் பெற்றுப்
பொங்குபல் வளமுமோங்கிப் பொலிசிர புரத்தில் ஒவ்வோர்
திங்களும் தோன்றி நாளும் திகழ்ந்துளக் கங்குல் நீக்கும்
நங்சதி ரவனையான "நச்சினார்க் கினியன்" வாழி.

வே. கிருஷ்ணமூர்த்தி.

நல்லபெரு நாவலரும் நன்மை மிகு மாணவரும்
எல்லவரும் ஏத்துநச்சி னார்க்கினியாய்!—வல்லபைசேர்
தந்திமுகன் பேரருளைத்தாங்கி விளங்குகவே
செந்தமிழ் நாட்டிற் சிறந்து. சோம. சரவணபவன்.

மாசி-மீ விடுகதை வினாவுக்கு விடை

"முனிவுடனே 'ஆடிரண்டு தம்முள் தாக்கி
முட்டுதலே அவைமுட்டை இடுத' லாகும்.
நனி'பனையைப் பன்னாடை பற்றிச் சுற்றல்
நாரியார் அப்பனையே மருவ' லாகும்.
உனில்,'உறையூர் தனில் ஆடு பசுபால் ஈதல்
ஒ நருடம்பால் கோழியிலே கறத்த' லாகும்"
எனநச்சி னார்க்கினிய! 'பூவ னார் டி.
எஸ். பிரண தார்த்திஹரற் கியம்பு வாயே.

குறிப்பு:—முட்டை—முட்டுதலை (முட்டு என்பதுடன் இரண்டன் உருபு 'ஐ' சேர்ந்தது) நாரியார்—பன்னாடை. அப் பனை என்பதில் 'அ' பண்டறி சுட்'டு.' உனில்—யோசித்துப்பார்த்தால். ஒரு-ஆடு, குடம்—பசு. கோழி--(முன்பு ஒருகோழி யானையை வென்ற ஊர்): உறையூர்.

ரா. பாலகிருஷ்ணன்.

நாங்கள் எழுபேர்

[இது வேர்ட்ஸ்வோர்த் மகாகவி இயற்றிய 'We are Seven' என்பதன் மொழி பெயர்ப்பு. "அழிவது உடலே யன்றி, ஆன்மா அன்று; ஆன்மா நித்யமானது" என்ற உணர்ச்சி பெரும்பாலும் நம்மில் அறிஞர்கட்குண்டு. போதிய அறிவும், அநுபவமும் இல்லாது, ஆண்டினும் அறச்சிறியவளாய் இருந்த ஒருகுழந்தை, தானறியாமலே இத்தகைய உணர்ச்சி உள்ளாள்போல் கூறும் உறுதிமொழிகளை வியந்து நம் கவிஞர் பின்வரும் விஷயத்தை நமக்குத் தெரிவிக்கின்றார்.]

நாங்கள் எழுபேர்.

உறுப்புத் தோறும் உயிருணர் வுற்று
மெள்ள உயிர்க்கும் கள்ளமில் மனச்சேய்க்(கு)
இறப்பைப் பற்றி என்னதான் தெரியும்?: 1

சிற்றில் வாழுமோர் சிறுமியைக் கண்டனென்.
தன்வய(து) எட்டெனச் சாற்றினள் அன்னவள்.
அவள(து) கூர்தல் அவள்செவ் விழியினைச்
சூழ்ந்து சுருள்பல தேய்ந்தடர்ந் திருந்தது. 2

நடையால், சீர்மையில் உடையால் அவளொரு
பட்டிக் காட்டுப் பாவைபோல் தோன்றினள்.
அவள்விழி கள்பே ரழகுவாய்ந் திருந்தன.
அவள் அழ(கு) என்னுடை அகமகிழ் வித்தது. 3

"சகோதரர் களும்சகோ தரருமாச் சிறுமி!
எத்தனை பேர்நீர் இருக்கிறீர்?" என்றேன்.
"எத்தனை பேரா? எழுவர் யாம் மொத்தம்" என்
றுரைத் தென்னை வியப்புறும் உளத்தொடும் நோக்கினள்.4

"அவர்கள் யாங்குளர்? அறைந்தருள்" என்றேன்,
யாங்கள் எழுவர். எங்களில் இருவர்
கான்வேப் பதியில் தான் வசிக் கின்றனர்.
இருவர் கடல்மிசை ஏகியுள் ளார்கள். .5

எங்களில் இருவர்: என் சோதரன் சோதரி
ஆலயச் சூழலில் அமர்ந்திருக் கின்றனர்.
ஆலயச் சூழலை யார்ந்துள குடிலில் யான்
அன்னையோ டவர்கள் அருகுளேன்" என்றனள். 6

"இருவர் 'கான் வே'யில் இருப்பதா உரைத்தனை,
'இருவர் கடல்மிசை ஏகினர்' என்றாய்.
இவ்வா றிருந்துமா எழுவர்? இன் மடந்தாய்!
அஃதெப் படியாம்? அறைந்தருள்" என்றேன். 7

அதனைக்கேட்டதும், "ஆண்பெண் யாங்கள்
எழுவரே ஆவேம். எம்மில் இருவர்இவ்
ஆலயச் சூழலை யார்மரத் தடியில்
ஆங்கமர்ந் துளார்" என அறைந்தனள் சிறுமி. 8

நாங்கள் ஏழுபேர்

WE ARE SEVEN.

———A simple Child,
That lightly draws its breath,
And feels its life in every limb,
What should it know of death? 1

I met a little cottage Girl:
She was eight years old, she said;
Her hair was thick with many a curl
That clustered round her head. 2

She had a rustic, woodland air,
And she was widely clad;
Her eyes were fair, and very fair,
—Her beauty made me glad. 3

"Sisters and brothers, little maid,
How many may you be?"
"How many? Seven in all," she said,
And wondering looked at me. 4

"And where are they? I pray you tell;"
She answered, "Seven are we;
And two of us at Conway dwell:
And two are gone to sea. 5

"Two of us in the churchyard lie,
My sister and my brother;
And, in the churchyard cottage, I
Dwell near them with my mother." 6

"You say that two at Conway dwell,
And two are gone to sea;
Yet ye are seven! I pray you tell,
Sweet maid, how this may be? 7

Then did the little maid reply,
"Seven boys and girls are we;
Two of us in the churhyard lie,
Beneath the churchard tree." 8

"என் அருஞ் சிறுமி! நீ யாங்கணும் ஓடுவை.
உன்னுடை உறுப்புகள் உயிருணர் வுற்றவை.
இருவர் இச் சூழலில் இருப்பரேல், நீவிர்
ஐவிர் தாமே ஆவீர்" என்றேன். 9

அதற்குச் சிறுமி, "அவர்கள் கல்லறை
இன்னும் பசுமையா இருப்பதைக் காணலாம்.
எனது நற்றாய் இருக்கு மிடத்திற்(கு)
ஏறக் குறைய ஈரா றடிகட்(கு)
அப்பால் அவைகள் அடுத்தடுத் துள்ளன. 10

"ஆங்கிருந் தேநான் அடிக்கடி என்றன்
கால்மேற் சோடு களைப்பின் னுவதும்
கைக்குட் டைகளின் கரைகளைத் தைப்பதும்.
அங்கிலத் திருந்தே அவர்கள் கேட்டிடப்
பண்ணார் பாடல் பாடவும் செய்வேன். 11

"ஆதவன் அத்தமித் தானதும், ஐய!
எழில்நில வெறிக்கையில், என்சிறு வட்டிலில்
அவ்விடத் திருந்தே அருந்துவன் இரவுணா. 12

"ஆதியில் இறந்தவள் சோதரி ஜேனே
கிடைதலையா அவள் கிடந்தனள் புலம்பி.
கடைசியில் அவள் படு கஷ்டமெல் லாம்அறப்
போக்கினர் கடவுள்; போயினள் அவளும். 13

"ஆதலின் அவளைஇவ் ஆலயச் சூழலில்
இட்டனர். புல்மீ தீரம் புலர்ந்துள
வேளையாகிய வேனிற் பொழுதில், என்
சகோதரனாகிய ஜானும் யானும்
அவள்சமா தியைச்சூழ்ந் தாடுவம் ஒருங்கே. 14

"நிலம்பனி பெய்துவெண் ணிறம்வாய்ந் துழியான்
ஓடிச் சறுக்கி ஆடும் போ(து) என்
சோதரன் ஜான்எனிற் போதர நேர்ந்தது.
அவன்அவள் அருகில் அமர்ந்துளான்" என்றனள். 15

அங்ஙன மாயின், அவர்கள் இருவரும்
விண்ணுல கத்தினை நண்ணினர் என்னில்,
நீவிர்எத் தனைபேர்? நிகழ்த்துதி" என்றேன்.
ஆங்கணும், "ஐய! யாங்கள் எழுவரே"
என்றே சிறுமி இசைத்தனள் விரைவில். 16

" You run about, my little maid,
Your limbs they are alive ;
If two are in the churchyard laid,
Then ye are only five"." 9

" Their graves are green, they may be seen,"
The little maid replied ;
"Twelve steps or more from my mother's door
And they are side by side 10

" My stockings there I often knit,
My kerchief there I hem ;
And there upon the ground I sit,
And sing a song to them 11

" And often after sunset, sir,
When it is light and fair
I take my little porringer,
And eat my supper there. 12

" The first that died was sister Jane ;
In bed she moaning lay,
Till God released her of her pain,
And, then she went away. 13

" So in the churchyard she was laid ;
And, when the grass was dry,
Together round her grave we played,
My brother John and I. 14

" And when the ground was white with snow,
And I could run and slide ;
My brother John was forced to go,
And he lies by her side." 15

"How many are you, then," said I,
" If they two are in heaven ?".
Quick was the little maid's reply,
"Oh, master! we are seven." 16

"என்னே! அவர்காம் இறந்துபோ யினரே!
இருவரும் இறந்தனர். இறந்தோர் ஆவி,வான்
அமர்ந்ததே" என்றேன். அவளுடன் செய்யும்
வாதமெல் லாம்வீண் வாதமா முடிந்தது.
ஏனெனில், என்னதான் இயம்பியும் அச்சிறு
மங்கை தன்னுடைச் சங்கற் பப்படி
'இல்லை. யாம் எழுவரே" என்றிசைத் தனளே. 17

ம. கோபாலகிருஷ்ணன்

சமாசாரக் கொத்து.

'' நண்பர் கழகம்:—உறையூரில், திரிசிரபுரத் தேசியக்கல்லூரி மாணவர்கள் ஒன்றுகூடி 'நண்பர் கழகம்' என்ற ஒரு சங்கத்தை நிறுவி, இரண்டுவருட காலமாக நடத்திவருகின்றனர். இவ்வருடம் பீ. ஏ. வகுப்பில் வாசித்துவந்த ஸ்ரீ வி. ஷண்முகம் அக்கிராசனராகவும், ஷெடி வகுப்பினரான ஸ்ரீ: வே கிருஷ்ணமூர்த்தி காரியதரிசியாகவும், ஸ்ரீ T. P. கந்தசாமி கணக்குப் பரிசோதகராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இச்சங்கம் மிகவும் விமரிசையாக நடந்துவருகிறது. இறைவனருளால் இது மேன்மேலும் விருத்தியடைக. திரிசிரபுரவாசிகளும் பாணவர்களும் இதற்கு உதவி புரிவார்களாக'' என்று வி. நாராயணன் என்பவர் எழுதுகிறார்.

திருச்சியில் ஆரோக்கிய விழாவும் 'குழந்தைத் திருநா'ளும் இம் மாதம் 15 ஆம் தேதி முதல் 21-ட வரை மனத்தைக் கவரத்தக்க பல்வேறு காட்சிகளுடனும் பிரசங்கங்களுடனும் படங்களுடனும் நடைபெற்றன. ஆயிரக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் அவற்றைக் கண்டு களித்தார்கள். மலைக்கோட்டையில் 'BABY' என்ற வார்த்தை மின்சார விளக்குகளால் அதிதூரத்தினின்று பார்ப்பவர் கண்களிலும் படுமாறு அலங்காரமாய் அமைக்கப்பட்டிருந்தது. இக்காட்சியின் சம்பந்தமான பொருட்செலவுக்கும் விநோதக்கூட்டத்திற்கும் தக்க பலன் நூற்றில் ஒன்றேனும் இருந்தால், பட்டபாட்டிற்குப் பலன் உண்டு; இது சம்பந்தமாகச் செலவழிந்த பொருளில் பாதியேனும் சுகாதார நிமித்தம் செலவிடப்பட்டிருப்பின், இக்காட்சி விளைக்கும் நலத்தினும், அதிகநலம் விளையும் என்பது எம் மனப்பூர்வமான எண்ணம்.

அரசரின் அறிவுரை:— மாட்சிமை தங்கிய நமது ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் பிரான், சமீபத்தில் பிரிட்டிஷ் கைத்தொழிற் காட்சிக்

(இதன் தொடர்ச்சி 91-ஆவது பக்கம்,)

"But they are dead; those two are dead!
Their spirits are in heaven!"
'Twas throwing words away; for still
The little maid would have her will,
And said, "Nay, we are seven!"

Wordsworth.

(90-ஆவது பக்கத் தொடர்ச்சி)

குச் சென்றபோது, அங்கு அமெரிக்கா போன்ற அந்நிய நாட்டு 'டைப் ரைட்டர்கள்' இங்கிலாந்தில் உபயோகிக்கப்படும் விஷயமறிந்து வருந்தி, 'இதுவெட்கந்தரும் சீர்கேடானவிஷயம். நம்நாட்டு யந்திரங்களை ஏன் உபயோகிக்கலாது?' என்று கண்டித்து அவ்வழக்கத்தை நிறுத்த ஏற்பாடு செய்து வருகின்றனராம். இஃதறிந்த பின்னாவது, நம்மவர்கள் நம்நாட்டுப் பொருள்களில் நாட்டம் செலுத்தி நலமுறுவார்களா?

நகர் விசாலிப்பு:— பம்பாய் நகரை விசாலிக்க எண்ணிக் கடலைத் தூர்க்க துரைத்தனத்தார் முயன்றனர்கள். இதுகாறும் இவ்விஷயமாய் ஜனங்கள் பொறுப்பாக, வீணில் செலவான ரூபாய் நாலு கோடியே எண்பத்தேட்டு லக்ஷம் என்று தெரிகிறது.

தஞ்சை அரண்மனையில் உள்ள 'சரஸ்வதி மால்' என்ற புத்தகசாலையிலிருக்கும் பழைய ஏடுகளைப் பண்டிதர்: உலகநாத பிள்ளை, "சென்னைப் புத்தகசாலைக் கமிட்டியார்" வேண்டுகோட்கிணங்கிப் பரிசோதித்தபோது, இதுவரை அச்சிடாத சில தமிழ் நூல்களும், அச்சுப்பிரதிகளில் காணாத பாகங்களும் கொண்ட சில ஓலைப்பிரதிகளும், பாடபேதங்கள்கொண்ட 'திருக்குற'ளும், 'பெருந்தேவனார் பாரத'செய்யுட்களில் அச்சிடப்படாத ஓர் பகுதியும், 'திருக்கோவையார் உரை'ஒன்றும், இவை போன்ற வேறு பல அரிய நூல்களும், இருக்கக் கண்டனராம். இவையாவும் அச்சேறி வெளியாதல் எக்காலமோ!

தேச பாஷையை வருகிற வருஷம் முதல், இன்டர்மீடியேட் வகுப்பிற்குக் கட்டாய பாடமாகக் கொண்டு நடத்தச் சென்னைச்சர்வகலாசாலையார் தீர்மானித்து விட்டதறிந்து மகிழ்கிறோம்.

சங்க விழா :—கொடுமுடி தமிழ்ச்சங்கத்தின் வருஷோத்ஸவம், சமீபத்தில், கோயம்புத்தூர் நீதிவாதி ஸ்ரீமத்: C. K. சுப்பிரமணியமுதலியார் அக்கிராசனத்தின் கீழ் நன்குநடைபெற்றதென்றும் அச்சமயம் சில தமிழ்ப் புலவர்களின் இனிய பிரசங்கங்கள் நடந்தனவென்றும் ஒருவர் தெரிவிக்கிறார். — பத்திராதிபர்.

திருமுருகாற்றுப்படை

(61-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

திருமுருகன் எல்லா இடங்களிலும் எழுந்தருளியிருப்பவனாயினும், சில இடங்களிற் சிறப்பாய் எழுந்தருளி இருக்கின்றனன். அவ்விடங்களைப் 'படைவீடுகள்' என்றும், 'பாடிவீடுக' ளென்றும் கூறுவர். அவைகளாவன: திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை, யென்பனவாம். நக்கீரர் இந்த ஆறு இடங்களிலும் எழுந்தருளியிருக்கும் திருமுருகனது காட்சியைப்பற்றியும் அப் பதிகளின் இயல்களைப்பற்றியும் பிற நலங்களைப்பற்றியும், ஒவ்வொரு பதிக்கும் ஒவ்வொரு அகவலாக, ஆறு அகவல்களில் இவ் வாற்றுப்படையைப் பாடி முடித்துள்ளார். இப்பதிகளுள் முதலாவதாக அமைக்கப் பெற்றிருப்பது திருப்பரங்குன்றம் என்னும் திவ்விய பதியாகும். இப்பதியின் இயற்கை வளன்களைப்பற்றியும் அங்கு எழுந்தருளி இருக்கும் பரம்பொருளின் பண்புகளைப்பற்றியும் 77 அடிகளில் ஆசிரியர் பாடியிருக்கின்றனர். முதலாவதாக, இவ் வரிகளில் அறிவித்திருக்கும் பொருளைச் சிறிது காண்போம்.

உலகத்தவர்கள் மகிழும்படி எழுந்து வலமாகச் சுற்றுவதும், பல சமயத்தவர்களாலும் புகழப் பெறுவதுமான ஞாயிற்றைக் கடலினிடத்தே கண்டாற்போல் விளங்குந்தன்மையுடையவர் முருகர். அவர் கண்களை மூடி மனசினாலே பார்த்தற்குக் காரணமாக விளங்குகின்ற காந்தியையுடையவர். அதிதூரத்திலுஞ்சென்று மிளிரும் ஒளியையுடையவர். தம்மைச் சரணென அடைந்தவர்களைத் தாங்குந் திருவடிகளையுடையவர். அத் திருவடிகள், அடைந்தவர்களின் அறியாமையைக் கெடுக்குந் தன்மையன. அவரது பெருமை பொருந்திய கையானது பகைவர்களை பழித்தலில் இடியை ஒத்திருக்கும். குற்றமற்ற சற்பினையுடைய தெய்வயானையார்க்குக் கணவர் அவர். குளிர்ந்தமாலை அசையும் மார்பினையுடையவர். அம்மாலையானது தேர் உருளை போற்றொடுக்கப்பெற்றிருக்கும். அங்ஙனம் தொடுப்பதற்குக் கருவியாயிருந்தன செங்கடம்பினது மலர்கள். இக் கடம்ப மரங்கள் பருத்த அடிகளோடுவிளங்கும். அவை இருள் தம்மிடத்தே தங்கி இருக்கும்படி அடர்ந்து தழைத்திருக்கும். இதற்குக்காரணம் காட்டினிடத்துக் கார்காலத்தில் முதன் முதலாக மழை பெய்தததான். அம்மழையானது, கடலிலே முகந்து கொள்ளப்பெற்ற நிறைந்த சூலினையுடைய மேகங்களால் விண்ணினின்று பெய்யப் பெறுவதாம்.

மந்தியும் புகுந்து அறியாத மரங்கள் அடர்ந்த மலைப்பக்கங்களில் காந்தள் மலர்கள் மலர்ந்திருக்கும். அம்மலர்களில் வண்டுகள்

மொய்ப்பதில்லை. அவைகள் நெருப்புப்போன்று விளங்கும். அத்தகை
ய மலர்களால் தொடுக்கப்பெற்ற குளிர்ந்தமாலையைச்சூடிய சிரசினை
யுடையவர் முருகர். இம்மலர்கள் மலரும் மலைச்சாரல்களின் அருகில்
சோலைகள் உண்டு. விண்ணுலகளவும் உயர்ந்துள்ள மூங்கிற் சோலை
கள் அம் மலைகளில் உண்டு. அச்சோலைகளில் கண்டார்க்கு அச்சத்
தைத்தரும் தெய்வமகளிர், 'கோழிக்கொடியானது நீடு வாழ்க' என்று
எதிர் ஒலி கேட்கும்படி வாழ்த்தி, பாக்கள் பாடி ஆடிக்கொண்டிருப்
பார்கள். அவர்கள் அடியிற் குறித்த இயல்களை யுடையவர்கள்:

அத்தேவமாதர்களின் சிவந்த சிறிய அடிகளில் சிறுசதங்கைகளா
லாகியஅணி அலங்கரிக்கும். அவர்கள் கால்திரட்சியாக இருக்கும்.
இடுப்பு வளைந்து அசையும் நிலையிலிருக்கும். தோள்கள் மூங்கிலை ஒத்
திருக்கும். பூ வேலை செய்யப்பெற்ற அழகிய ஆடைகளை அவர்கள்
அணிந்துகொண்டிருப்பார்கள். அவ் வாடை இந்திரகோபப் பூச்சி
போன்று உள்ளது. இச் சிவந்த நிறம் சாயத்தினால் உண்டாகியதன்று:
இயற்கையிலேயே உள்ளது. பலமணிகள் கோத்த காஞ்சியாகிய
அணியை அணிந்த அரையினையுடையவர்கள். இயற்கையழகினை
யுடையவர்கள். பொன்னாற் பொலியும் அணிகளையுடையவர்கள். அதி
தூரத்தேயும் விளங்கும் திருமேனிப் பொலிவுடையவர்கள்.

இவ்வாமகளிரின் கூந்தலைப் பாங்கியர்கள் நன்றாக ஆய்ந்து சிக்
கெடுத்திருப்பார்கள். அக்கூந்தல் கடையொத்து நெய்ப்பசை பெற்
றிருக்கும். சிவந்த காம்பினையுடைய வெட்சியின் சிறியமலர்களை விடு
பூவாக அத்தலையில் தூவியிருப்பார்கள். அதற்குமத்தியில் பச்சை நிறக்
காம்பையுடைய குவளைமலர்களின் சுத்தமான இதழ்களைக்கிள்ளி இட்
டிருப்பார்கள். தலையில் இரண்டு அணிகளை அழகுற வைத்திருப்
பார்கள். ஒன்று 'சீதேவி' என்ற பெயரைப் பெறும்; மற்றொன்று வலம்
புரிச்சங்கு போன்று செய்யப்பெற்றிருக்கும். நெற்றியில் அழகிய
திலகம் உண்டு. அத்திலகத்திற்கு மேல் ஒரு அணி தொங்கிக்கொண்
டிருக்கும். அது சுறாமீனை ஒத்திருக்கும். சுறாமீனின்பிளந்த வாயைப்
போன்று அதன் வாயிருக்கும். அவர்கள்கூந்தலில் கூட்டவேண்டுவன
கூட்டி அழகாகக் கொண்டையிட்டிருப்பார்கள். அதில் குளிர்ந்த சண்
பகப்பூவைச் செருகியிருப்பார்கள். அதைச்சுற்றிலும் மருதமரத்தினது
ஒள்ளிய பூங்கொத்துகளை அமைத்திருப்பார்கள். அம்மலரின் இத
ழின் புறப்பாகம் கருமையாக இருக்கும். அக இதழ்கள் அழகுற்று
விளங்கும். நீர்ப்பூவின் சிவந்த அரும்புகளால் மாலை தொடுத்து முற்
கூறியவைகளை வளையச் சுற்றியிருக்கும். வளமுடைய காதில் அமைந்
துள்ள அசோகினது தளிர்கள் ஆபரணங்கள் அலங்கரித்து விளங்
கும் மார்பில் அசைந்து விளங்கும். வயிரம் வாய்ந்த சந்தனக் கட்டை
யை உரைத்தலால் உண்டாகிய சந்தனக் குழம்பைக் குவிந்து விளங்
கும் தனங்களில் அப்பியிருப்பார்கள். அதன் தோற்றம் மருத மலரை
அப்பினாற் போன்றிருக்கும். இச் சந்தனக்குழம்பின் பூச்சுப் புலர்

வதன் முன் வேங்கையின் விரிந்த மலரின் நுட்பமாகிய தாதை அதன் மேல் அப்புவார்கள். அதன் பின்னர், விளவினது சிறிய தளிரைக் கிள்ளி அழகுற ஒருவர் மேலொருவர் தெறித்துக்கொள்வார்கள்.

(இன்னும் வரும்)

மு. நடேச முதலியார்,
திருச்சிப் பிஷப் ஹீபர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்.

பத்திராதிபர் குறிப்பும் அறிவிப்பும்.

லோகோபகாரி, செந்தமிழ், பிரஜானுகூலன், தெய்வபக்தன், குணநிதி, இந்துநேசன், கம்மபாலன், செல்வக்களஞ்சியம், தமிழர், ஆனந்தபோதினி, தமிழ்ப்பொழில், நியாயாபிமானி-ஆர்யதர்மம் இவற்றை மாற்றுப் பத்திரிகையாக அனுப்பி நம்மைக் கௌரவப்படுத்திய சகோதரருக்கு நன்றி கூறுகிறோம். நம் பத்திரிகையைத் தவறாமல் பெற்றுவந்தோ, அல்லது பெறவிரும்பியோ உள்ள பிற சகோதரர்களிடமிருந்தும், அவர்கள் பத்திரிகைகளையும் எதிர்பார்க்கிறோம்.

2. மதுரை ஸ்ரீமத் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனார் அனுப்பிய வில்லிபாரத சுத்தப் பெரும் புதுப் பதிப்பும், உறையூர் ஸ்ரீ S. வரதராஜன் அனுப்பிய 'நிசுளாபுரி' என்ற சிறு நூலும், ஸ்ரீமத் R. S. கங்காஜடேச சர்மா அனுப்பிய சியாமளா தண்டக மொழிபெயர்ப்பும் வரப்பெற்றோம். இவற்றின் மதிப்புரை விரைவில் வெளிவரும்.

3. நம் பத்திரிகையைப்பற்றிய விளம்பரங்களைத் தம் பத்திரிகையில் பிரசுரிக்க விரும்பும் சகோதரருக்கு நன்றிகூறி, அவர்கள் செய்யும் உதவிக்கு மாறாக, அவர்கள் பத்திரிகையைப் பற்றிய விளம்பரங்களை நம் பத்திரிகையில் பிரசுரம்செய்து வருவோம்.

4. நமக்கு, மாற்றுப் பத்திரிகை, மதிப்புரை பெற விரும்பும் நூல்கள், கடிதங்கள், விஷயதானங்கள், பணம் முதலியன அனுப்புவோர், "திருச்சி" என்ற விலாசத்திற்கு அனுப்பாமல், "நச்சினார்க்கினியன்' பத்திராதிபர் 'நச்சினார்க்கினிய நிலயம்' 'தெப்பக்குளம் போஸ்டு' என்று விலாசமிட்டனுப்புக.

5. சிறந்த தமிழபிமானியும் நம் மெய்யன்பருமான ஸ்ரீமத் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் (G. B. V. C,) அவர்களுக்கு ராவ் ஸாஹிப் பட்டம் கிடைத்தமைக்கு மகிழ்கிறோம்.

இனாம்! இனாம்!! இனாம்!!!

ஒரு ரூபாய் முதல் 5 ரூபாய் வரை.

எழுத்து மாறிய வார்த்தைகளேனும், பிறவகை 'விடுவிப்பு வினா'க்களேனும் மாதந்தோறும் இனி நம் பத்திரிகையில் வெளிவந்துகொண்டிருக்கும். அவற்றிற்கு நேரிய விடையைப் பின்வரும் நிபந்தனைகட்குட்பட்டு எவரும் எழுதியனுப்பலாம்.

1. சரியான விடை தருவோர் பெயர்கள் எழுதப்பட்ட சீட்டுகள் குலுக்கி எடுக்கப்படும். முதலில் எடுபடும் பெயருள்ளவருக்கு (அவர் தரும் விலாசப்படி) ஒரு ரூபாயேனும், ஒன்றேகால் ரூபாய் விலையுள்ள எமது பிரசுரமேனும் வெகுமதியாகக் கொடுக்கப்படும்.

2. ஆண்டினிறுதியில் (மாதந்தோறும் பரிசுபெற்ற) பன்னிருவர் பேருள்ள சீட்டுக்களையும் குலுக்கி யெடுத்து முதலில் எடுபடும் பெயருள்ளவருக்கு (அவர் குறித்துள்ள விலாசத்திற்கு) ரூபாய் ஐந்தேனும், ஆறு ரூபாய் விலையுள்ள எமது பிரசுரங்களேனும் வெகுமதியாக அளிக்கப்படும்.

3. பணம் புஸ்தகம் முதலியன பரிசுபெறுவோருக்கு அவைகளை அனுப்புவதால் நேரும் செலவு, அவர்களைச் சேர்ந்ததே.

(4) அந்தந்த மாதத்திய விடை, குறிப்பிட்ட தேதிக்குள் நமக்குக் கிடைக்க வேண்டும்.

(5) இப்பரிசுகள் சம்பந்தமாய் யாதொரு கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளமுடியாது.

(6) விடையில், ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

(7) பரிசு பெற விரும்புவோர் அந்தந்தச் சஞ்சிகையில் அவ்வவ் 'விடுவிப்பு வினாக்கள்' வரும் காகிதத்திலேயே, வேண்டுமாறு விடை எழுதி, அப்பக்கத்தையே கத்திரித்து எமக்கு அனுப்பவேண்டும். ☞ தனிக்காகிதத்தில் எழுதி அனுப்பப்படும் விடைகள் அங்கீகரிக்கப்படமாட்டா.

(8) பரிசு பெற அருகராயினோர் பெயரும் உரிய விடையும் மறுசஞ்சிகையில் வெளியிடப்படும்.

(9) விடையனுப்புவோர் "பத்திராதிபர், நச்சினார்க்கினியன், (விடுவிப்புப் பரிசுப் பகுதி) தெப்பக்குளம் போஸ்ட்" என்ற விலாஸத்திற்கே அனுப்பவேண்டும்.

பங்குனி-மீ கேள்வி அடுத்தபக்கம் காண்க. விடைவிடுக்க விரும்புவோர், குறித்தவாறு விடையெழுதி அப்பக்கத்தை கத்திரித்து எமக்கு அனுப்புக.—பத்திராதிபர்

இனும்! இனும்!! இனும்!!!

ஒரு ரூபாய் அல்லது 1ரூ. 4 அணு விலையுள்ள
எமது பிரசுரங்கள்

கீழேகண்ட எழுத்துமாறிய வார்த்தைகளைச் சரியாயெழுதி அனுப்பவேண்டியது. கேள்வி மொழிகளுக்கு நேருக்கு நேர் விடையெழுதி அனுப்புக. விடை பங்குனி மாதம் 25ம் தேதிக்குள் கிடைக்கவேண்டும்.

"நச்சினுர்க்கினியன்" பத்திராதிபர்.

விடுவிப்புகள்

1. தியைகஅரேமா.	1. ....
2. குகம்கலமாரதி.	2. ....
3. விடையாரூர்கலேருவுதி	3. ....
4. தசவாதைத்வ.	4. ....
5. கடைசங்கைபர்வ்வா.	5. ....
6. சரிகாடைபவங்ர்ச.	6. ....
7. கும்பம்வமாரச.	7. ....
8. காககைமேதுரித	8 ....
9. சாம்சாதேச்மாச.	9. ....
10. லைதிஞ்ருநுமாசோவி.	10. ....

மகா-ா-ா-ஸ்ரீ "நச்சினுர்க்கினியன்" பத்திராதிபர் அவர்களுக்கு

ஐயா,

விடையில் தங்கள் தீர்ப்பே முடிவானதென்றும் சட்ட சம்பந்தமாய்ச் சொல்லத்தக்கதென்றும் ஒப்புக்கொள்ளுகிறேன்.

பெயர்______________________________

விலாஸம்____________________________

தேதி______________________________